உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உஉ } வியமார்கழி 1946—டிசம்பர் { மலர் க

## பொழிற்றொண்டர் வேண்டுகோள்

எதிர் பாராத வகையில் ஏற்பட்ட தாள் முட்டுப்பாட்டி னால் நமது பொழில் வெளியீடு ஆறு திங்களாகத் தடைப்பட்டு நின்ற தாழ்வினைப் பொறுத்தருளும்படி பொழி லன்பர்களைக் கேட்டிருந்தோம். இதுகாறும் பொறுத்தருளிய அன்பர்களுக்கு முதற்கண் எமது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பலவகை முயற்சிகளுக் கிடையே நம் பொழிலுக்கு வேண் டிய தாள்கள் நான்கு நாளைக்கு முன்னர்த்தான் கிடைத்தன. இப்போது நமது தமிழ்ப் பொழில் விய ஆண்டு மார்கழித் திங்க ளுக் குரிய இதழாக வெளிவருகின்றது. வேண்டும் பொழுதின் மையால் போதிய பக்கங்களில் வெளியிட இயலவில்லை. இனி தைத் திங்கள் முதல் வைகாசித் திங்கள் வரை வருதற்குரிய எஞ்சிய இதழ்களும் விரைவில் வெளிவரும்.

இதுகாறும் நேர்ந்த தாழ்வினை யுளங்கொளாது, முன் போலவே, நம்பொழிலுக்கு வேண்டும் உதவி நீர் பெய்து, நம் சங்கத்தை வளர்த்து வரும்படி பொழிலன்பர்களைப் பணிவுடன் வேண்டிக்கொள்கின்றோம்.

தமிழ் வல்ல பெரியோர்கள் அனைவரும் அவ்வப்போது வேண்டும் பொருளுரைகளை வழங்கி, முன்போலவே, நம் பொழி லைப் போற்றி யருள்வாராக.

தமிழ்த்தாய் வாழ்க

## கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

# யாழ் நூல் அரங்கேற்றம்

அருண்மிகு விபுலானந்த அடிகளார், பதினான்கு ஆண்டுகளாக இடைவிடாது நிகழ்த்திய இயலிசை யாராய்ச்சியினால் நுண்ணிதிற் கண்டுணர்ந்த பழந் தமிழிசைநூன் முடிபுகளை ஒருகோவைப்படுத்தி, ஆயிரம் யாண்டுகளாக மறைந்துபோன தமிழர் இசைக் கருவியாகிய யாழின் இயல்பினை நன்குணர்ந்து, உருவாக்கிச், செயற்படுத்தும் வண்ணம், பண்டைத் தமிழர் இசைத்திறன் விளக்கும் இசைத் தமிழ் நூலாகிய **யாழ் நூலினைத்** தமிழகத்துக்கு இயற்றி யுதவியுள்ளார்கள்.

நம் சங்கச் சார்பில் வெளிவரும் இவ் **யாழ் நூல்** அரங்கேற்றம், நிகழும் சர்வசித்து, வைகாசி, ௨௨, ௨௩ (5, 6—6—'47), வியாழன், வெள்ளி இரண்டு நாட்களிலும் * **திருக்கொள்ளம்பூதூர்த்** திருக்கோயிலிலே ஆளுடைய பிள்ளையார் திருமுன்னர் நிகழவிருக்கின்றது.

இவ் விரண்டு நாட் காலையிலும், அருண்மிகு அடிகளார் அவர்கள் யாழ்நூலி லுள்ள இசைநூன் முடிபுகளை எடுத்துரைத்து விளக்குவார்கள். நண்பகலுக்குமேல், அடிகளார் கணக்கின்படிப் புதுவதாக அமைக்கப்பெற்ற வீணைக் கருவிகளிலே, அவர்கள் ஆராய்ச்சியிற் கண்ட இசை யுருவங்கள் இசைத்துக் காட்டப்பெறுவ. இவ்வரங்கேற்றத்தை யொட்டிய இயற்புலவர் சொற்பொழிவுகளும் இசைப்புலவர் இசையரங்கும் நிகழும்.

அன்பர்கள் இவ்விழாவினைச் சிறப்பித் தருள்வார்களாக.

கருந்திட்டைக்குடி }
12—5—47 }

ஆ. யா. அருளானந்தசாமி நாடார்,
தலைவர்.

---

* திருக் கொள்ளம்பூதூர், கொரடாச்சேரி புகைவண்டி நிலையத்தி லிருந்து நான்கு கல் தூரத்தி லுள்ளது.

# நல்ல நட்பு.

பண்டித ந. ரா. சுந்தரராசன்
கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர்.

மணித வாழ்க்கை இவ்வுலகின்
மகிழ்ச்சி யோடும் மாட்சிமிக
இனிதே நடப்ப நட்புணர்ச்சி
இன்றி யமையா தெவ்வழியும்
துனியும் துயரும் தொல்லையுமே
சூழ்ந்து நெருங்கும் * உயிர்ப்போரில்
தினையின் அளவும் நாம்மகிழ்தல்
சிறந்த நட்பின் பயனன்றோ? 1

ஒருவர்க் கொருவர் உறுதுணையா
உதவிக் கொளுநல் ஆதரவின்
மருவிப் பழகும் மாட்சியினால்
மனமே ஒத்து மற்றென்றும்
ஒருவிப் பிரியா துடனியைந்தே
உயிரும் உணர்வும் எனவொன்றை
இருவர்க் கெய்தும் நிலையன்றோ
இனிய நல்ல நட்பெனலே? 2

இன்ன சிறப்பின் நட்பன்றே
எய்தும் இன்னல் இடுக்கண்கள்
துன்னி வருத்தும் பலதுயர்கள்
தொல்லை யெல்லாம் நமைமறைத்தே
என்னும் இன்பம் இவ்வுலகின்
ஏதோ சிறிதும் உளதேபோல்
நன்னர்க் காட்டி வாழ்க்கைநெறி
நம்மை நடாத்திச் செல்வதுவே! 3

எல்லா உயிர்க்கும் இயல்பாக
இறைவன் படைப்பில் நட்புணர்ச்சி
இல்லா தில்லை இன்றேல்
இன்பம் சிறிதும் அவையெய்தல்

---

* உயிர்ப்போர் — உயிர்ப்புப் போர் (struggle for existence.)

ஒல்லா தாடும் உயிர்த்தொகைகள்
ஒன்றிப் பலவும் உடன்கூடி
நில்லா நின்றே உயிர்வாழும்
நீர்மை கருதின் இதுதெளிவாம். 4

அன்பே உருவாம் ஆண்டவன்றான்,
அருளோ டெல்லா உயிர்களுக்கும்
இன்பே மிகவும் எய்துவிப்ப
எனைப்பல் பிறப்பாம் படிநிலையால்,
நன்றே அறிவும் அன்புமிக
நலமே பெருக்கித் தன்நிலையைச்
சென்றே அடையச் செய்கின்றான்
செய்வோன் அருளின் திறமென்னே! 5

இறையின் நிலையைப் படிப்படியே
எய்து வதற்கும் இன்புறற்கும்
அறிவும் அன்பும் மேலோங்கி
ஐதே வளர்தல் வேண்டுமென்றேம்
முறையே சொற்ற இவையிரண்டும்
முதிர்ந்து வளர்ந்த ஒருநிலையே
நெறியே நட்பாம் பெருநிலையாம்.
நிகழ்த்தல் என்னே பிறநேரே ? 6

நல்ல நட்பிற் சிறந்ததென
நன்றே பல்கால் நயந்தாய்ந்தும்,
சொல்ல வேறு பிறிதில்லை.
தூய காதற் பெருநிலையும்,
எல்லை யில்லா அருட்கடலாம்
இறையோ டொன்றும் உயர்நிலையும்
அல்ல வென்னின் இனிநட்பின்
அருமை பெருமை தெரித்தலெவன்? 7

இயற்கைத் தெய்வப் பெரும்புலவர்
இனிய நமது வள்ளுவனார்
செயற்கே யரிய யாவையுள
சிறந்த நட்பி னதுவேபோல் ;

உயற்கே யரிய காப்பன்றோ
உறும்பல் வினைகட் குதுவென்று
மயற்கை யறவே நன்றுரைத்த
மாட்சி ஈதே குறித்தன்றோ? 8

இற்றே நட்பின் சீர்த்தியென,
எணைத்தும் எவரும் எண்ணற்க
சற்றே யுரைத்தேம், வள்ளுவனார்
தாமே பதினேழ் தலைப்பின்கீழ்
உற்றே விரித்தார் நட்பின்சீர்
என்று, ஆங்கே இனியாது
மற்றே நட்பின் சீர்குறித்து
வரைந்தே யளந்திங் கியாமுரைப்பேம்? 9

நட்பின் பெருமை இனைத்தெனினும்;
நண்பிற் குரியார் தமைப்பெறலும்,
பெற்றாற் செய்யும் பெற்றியும்,மற்
றவர்தாம் பிரிவே யின்றுளமொத்
துற்றார் எனநன் றொழுகுதலும்,
உவற்றை யெல்லாம் உன்னுதுமேல்
இற்றாம் மெய்ந்நட் பென்பதுதான்
எய்து வதற்கிங் கெளிதொன்றோ? 10

சேர மானும் சுந்தரரும்,
சிறந்த சோழன் பிசிராந்தை
ஏர்கொள் வாரும் தமக்கெவரும்
இணையில் புலவர் கபிலரொடு
பாரி வேளும் என்னுமிவர்
பண்டு கொண்ட, நட்புரிமை
நேரும் திறந்தான் எல்லோர்க்கும்
நேர்தல் இயலும் நிலைமையதோ? 11

அரிய பொருளொன் றெய்துதற்கிங்
களவே யில்லை இடுக்கண்கள்;
பெரிய நட்பே பேணுநரும்
கருத்தின் முரணும், பிறழ்ந்துணர்வும்

நரியர் புல்லர் நயப்புரையும்,
நகையே வினையே முடிதன்முதற்
குறியா நிகழ்வும், இடையீடும்
குறித்தே பிரியக் கூடுமன்றே ? 12

மாறு கொண்டு நம்மோடும்
வருத்தம் விளைப்போர் ; திங்கிழைப்போர்
ஊறு நமக்கே பிறர்த்தூண்டி
உறுமா செய்வோர் ; புறம்பழித்தே
கூறு கிற்போர் அவரெல்லாம்,
குறித்தே நினைப்பின், முன்பொருகால்
வேறு நின்றே நமையகலார்
மேவிப் பிரிந்த நண்பலரோ ? 13

அல்ல தூஉம்ம்; கொள்கைகுணம்,
அறிவும், பிறவும் அவரவர்க்கும்
பல்ல வகையின் முரணுதலால்,
பண்பிற் சிறந்தே உணர்வொத்த
நல்ல நண்பர், நலமிக்கார்
நமக்குக் கிடைத்தல் அரிததனுல்
சொல்வ ஓர்ந்தே துணிந்துகொள்திர்
தூய்நட் பென்பதெதுவென்றே 14

துன்பின் உதவல் ; மிகுதிக்கண்
இடித்தே யுரைத்தும் துரிசகற்றல் ;
இன்பம் உறுத்தல் ; என்றுநமைப்
பிரியா திருத்தல் ; எப்போழ்தும்
அன்பே காட்டி நலம்செய்தல் ;
அரிய பிழைகள் பலபொறுத்தல் ;
நன்றே உசாவி அறிவுரைகள்
நல்கி நம்மை முன்னேற்றல் ; 15

தாழ்வில் உயர்வில் எவைவரினும்
தாமும் கலந்தே பகிர்ந்துகொளல்;
வாழ்வில் துணையும் வலியுமென
மருங்கே நின்று வழிகாட்டல்;

சோர்வு தொலைத்தே அறம்பொருளே
முதலாச் சொல்லும் துறைகளின்கண்
ஆர்வ முறுத்தல்; நமக்கன்பாற்
பிரிய லாகா உயிரொத்தல்; 16

என்ப முதலாம் இயல்நிறைந்தே,
இனிய நண்பர் உதவியெலாம்
நன்றும் நமக்குச் செய்வனதாம்
நல்லோர், பெரியோர், புலவோர்கள்
முன்பு நமக்காச் செய்தளித்த
முதுநூல் கலைநூல் முதலினவே
என்றால் நேரும் இழுக்கென்னை?
இதனை மறுப்பார் எவருளரே? 17

எண்மை யாகக் கிடைத்தலினால்,
என்றும் பிரிவில் நிலைமையினால்
உண்மை நெறியிற் செலுத்திநமக்
குறுதி யளிக்கும் துணைமையினால்,
புன்மைச் சோர்வின் திறமொழிந்து
புலவோர், கலைஞர் நூல்களொடும்
நன்மை எய்தக் கொளுந்தொடர்பே
நல்ல நட்பாம்! என்றுணர்க. 18

கற்று வல்ல புலவோர்கள்,
கலைஞர் சான்றோர், என்றிவர்கள்
மிக்க அருளான் வரைந்தளித்த
விரிந்த சிறந்த நூல்களெலாம்
உற்றுப் பயின்றே உணர்ந்துமகிழ்
உயர்ந்த நட்பே இறையருளால்
பெற்று நின்றே எல்லோரும்
பெரிதும் வாழ்தும் சிறப்புறவே! 19

## கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

# கரந்தைப் புலவர் கல்லூரி

---

இக் கல்லூரி தமிழவேள் த. வே. உமாமகேசுவரனர் அவர்கள் தண்ணிய உள்ளத்திற் றேன்றி, அவர்களின் தளரா முயற்சியால் வேரூன்றி, முத்தமிழ் வள்ளல், இராவு பகதூர் ஆ. யா. அருளானந்தசாமி நாடார் அவர்களின் புரப்பினலும், பிற செல்வர்களின் புரப்பினலும், கடந்த ஒன்பதாண்டுகளாகப் பணியாற்றி வருகின்றது. கல்விக் கின்றியமையாத அமைதியும் இயற்கை நலனும், தட்பமும் சூழ்ந்த இடத்தில் நிற்கின்றது இக் கல்லூரி. சீரிய ஆசிரியர்கள், மாணவர் முற்போக் கொன்றினையே குறிக்கோளாகக் கொண்டுழைக்கின்றனர். தனிப் பட்டமுறையில் ஒவ்வொரு மாணவரும் நம் கல்லூரியில் தாயன்புடன் பேணப் பெறுகின்றனர். தமிழ்க் கல்விக் கேற்ற இடம் இக் கல்லூரியே யாகும்.

இக்கல்லூரியிற் சேர விரும்பும் மாணவர்கள், முக் காலணு அஞ்சற்றலையைக் கரந்தைப் புலவர் கல்லூரி எழுத் தாளருக்கு அனுப்பி, விண்ணப்ப மடல் பெற்று, விண்ணப் பங்களை, நன்னடக்கைச் சான்றுடன், நேரிலோ அல்லது அஞ் சல்வழியோ, 'எழுத்தாளர், கரந்தைப் புலவர் கல்லூரி, கரந்தைத் தமிழ்ச் சங்கம், கருந்திட்டைக்குடி, தஞ்சாவூர்' என்னும் முக வரிக்கு 8—6—1947க்குள் அனுப்பவேண்டும். விண்ணப்பங் களை ஒப்பவோ தள்ளவோ சங்கத்திற்கு முழு உரிமையுண்டு.

மாணவர்க்கு இலவச உண்டி அளித்தற்குச் சங்கப் பொருள்நிலை இதுபோது இடந்தரவில்லை. வாய்ப்பு நேரும் பொழுது, கல்வித் தகுதியும் வறுமைச் சான்றும் உடைய மாணவர்க்கு இலவச உணவு அளிக்கப்பெறும்.

இக்கல்லூரியில் உயர்நிலை மூன்று வகுப்புகளும் (Advance classes), வித்துவான் வகுப்புகளும் (Entrance, Preliminary and Final Vidwan classes) நடைபெறுகின்றன.

கருந்திட்டைக்குடி,
9—5—'47.

ஐ. குமரசாமி பிள்ளை,
எழுத்தாளர்.

---

# அரியதும் பெரியதும்

K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

அரிதாகிய மக்கட் பிறவி யெடுத்துள்ளோர், உலகினுக் குய்யு நெறி காட்டிய உத்தமர்களால் உயிரினுஞ் சிறந்ததாகப் பெரிதும் போற்றப்படு மவற்றைக் கைக்கொள்ளக் கடவர். உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நன்னெறி யாகிய பெருநெறியின் அருமை பெருமைகளை யறியாது, அல்ல லுற்று, விடய போகச் சழக்கில் வீழ்ந்து வருந்தும் மாந் தர்க்குப் பெரியோர் கொண்ட நன்னெறியின் விழுத்தகு சிறப் பினையும் அதனு லுண்டாகும் பயனையும் விளக்கவே, அருள் வள்ள லாகிய அண்ணல், வேற்றுமையின்றி நன்மக்களால் போற்றத் தக்க பெருந்தகைமை யுடையாரை உலகினுக் கீந் தருளுவார். இத்தகைய பெண்ணம் பெரிய பெற்றிமையார் தெய்வப் புலமை வாய்ந்த திருவள்ளுவர் என்ற உண்மை, அவர், தாமின்புறுவது உலகின்புறவே யெனக் கொண்டு மக் கட் குறுதி பயக்கும் உண்மைப் பொருட்களை யெல்லாம் உல கறிந்துய்ய, நிரல்பட ஒழுங்குபடுத்திப் பேரருளுடன் வெளி யிட்ட அருங் குறளாலால் தெளியப்படும்.

'நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை யென்னும், பெருமை யுடைத்து' இவ்வுலக'மாதலான், நெருநல் இருந்தது இன்றில்லை. இன்றிருப்பது நாளை இல்லை யென்று கூறும் வண்ணம் கால வியல்பு மாறுதலும், மற்றும் நம்மை யடுத்திருப்பவை யாவும் கடிது பொழுதில் கழிந்து மாறுதலுமாகி உலகில் நாடோ றும் நிகழும் நிகழ்ச்சி, கற்றுத் துறைபோகிய காசறு காட்சி யரது உள்ளத்தையும் அலைக்கழித்து, அறிவு மயக்கத்தையும் துன்ப அடைவையும் தரும். இம்மண்ணுலகில், என்றும் ஒரு படியாய் நின்று மனத்திற்கு ஆறுத லளிப்பது காடு கடல், மலை, ஆகாயம் என்பவையே. இதுபற்றியே, முக் குற்ற மற்ற முனிவரும், நாள் முழுவதும் ஓயாது உடலையும் மனத்தையும் வருத்திக் சோர்ந்த மாந்தரும், அறிவு விளக்க மும் அகவமைதியும், பெறற்குப் புறவமைதிசான்ற வானையும், கடலின் பெரும் பரப்பையும், மலையின் மாண்பினையும் கண்டு, ஆண்டவனது அருட்டிறத்தைச் சிந்தித்துணர்ந்து, தம்மையும் மறந்து இன்பத்திலாழ்கின்றனர். இவ்வின்ப நிறைவிற் பதிந்த எண்ணங்களே, அவர்தம் மொழிகளில் விளங்கி நின்று, நம்ம னோர் உள்ளத்தைச் செம்மைப்படுத்துவன வாகும்.

வேட்டவை வேட்டாங்கு அள்ளிப் பருகுதற்கு ஓரினிய ஊற்ருய் விளங்கும் திருக்குறளில், பெரு நாவலர்,

(க) செய்யா மற்செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது.

(உ) காலத்தி ஞற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

(ங) பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது.

(ச) நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம்
மலையினு மாணப் பெரிது.

என உலகிற்கு வழங்கிய செந்தமிழ்க் குறட் பாக்களின் மூலம், கண்ணகல் ஞாலம், கடல், மலை ஆகியவற்றின் பெருமையின் எல்லையினையும், உட்கிடையையும், அவைகளின் நிறைமாண்பினையும், குறைமாண்பினையும், உவமை முகத்தால் இனிது புலப்படுத்தியுள்ளார். அவற்றை ஆய்தல் பொருத்த முடையதாகும்.

ஒருவர்க் கொருவரியற்றும் உதவிகட்குத் தலை சிறந்த மூவகை யுதவிகளை, செந்நாப் போதார், செய்யாமற் செய்த உதவி, காலத்தினுற்செய்த உதவி, பயன்றூக்கார் செய்தஉதவி என நிரலே பகுத்தூ, அம்மூன்றையும் முறையே வையகமும் வானகமுமாற்றினும் ஒத்தலரிது,ஞாலத்தினும் மாணப்பெரிது, கடலினும்பெரிது என மொழிந்து விதந்தனர். தமக்கு ஒருவர் செய்த நன்றிக்காக எதிர் நன்றி செய்வது மக்கட்டன்மைக் குரிய பொது இயல்பாதலின், அதனை விடுத்துத் திருவள்ளுப் பெரியார், முன்னர் தமக்கு யாதொரு நன்றும் செய்யாதார்க் குச் செய்யும் நன்றியையே முதற்கண் எடுத்துக் கொண்டு, செய்யாமற் செய்யு மிவ்வுதவி, மிக உயர்ந்ததாகவும் பெரிதாக வும் இருத்தல் வேண்டுமெனக் கருதி, அதனேடு ஒப்புமையுங் காணத் தொடங்கிவிட்டார். பெரிதிற்கும் உயர்விற்கும் பேரெல்லையாக 'நிலத்தினும் பெரிதே, வானினு முயர்ந் தன்று' எனக் கருதப்பட்ட வானகத்தையும் வையகத்தையும் இவ்வாறு காணுங்கால், வள்ளுவர், மெய்ப்பொருளை ஐயப் பாடின்றித் தெளிந்து பின் துணிந்தாராது அறிவின் கண்ணது எல்லா வுலகு மாதலானும், மற்றும் அத்தகைய பயனறிந்த நல்லார்க்கு இம்மண்ணுலகத்தினும் மேலுலகம் நணித்தாம் தன்மை யுடைத்தாதலானும், வானகத்தையும் வையகத்தை யும் முதற்கண் வைத்தோதினர். அன்றியும், தன்னை அகழ்

வாரையும் தாங்குமிந்நிலத்தில், வாழ்வாரெல்லாம் வானக நோக்கி வாழவேண்டி யிருத்தலான் வானகமும் வையகமும் வள்ளுவரது கருத்துக்கு முற்பட்டன. வானம் வழங்கா தெனின் உயிர்கள் யாவும் ஊனுடலை யிருப்பிடமாகக்கொண்டு வாழும் வாழ்க்கையினை யுடையவன வாகா என்பது ஈண்டுக் கருத்திற் பதிக்கத் தக்கது. மற்றும் வையகத்தாரால் போற் றப்படும் கடவுளரது வாழ்விடமும் துறக்க இன்பமும் நிலவும் இடமும் வானகமென்க.

வானகம், புலன்களால் அறியும் மயக்கினை நீக்கித் தவ மெனும் விழுச் செல்வத்தை மேற்கொண்டாரைப் போற்றும் உலகமாதலானும், மற்றும் அது, புலவர் பாடும் புகழுடை யோர்க்கும், இளிவரின் வாழாத மான முடையார்க்கும், நற் குணத்தாலும், அஃகி யகன்ற நுண்ணறிவாலும் பிறர்க்குக் கைம்மாறு வேண்டாதுதவும் கடப்பாட்டானும் புகழ்படைத்த உயர்ந்தோர்க்கும் இருக்கை தந்து, அன்னோர் கருதியவற்றை அக்கணமே யுதவும் நிகரற உயர்ந்த சிந்தாமணியும், குன்றாத செந்தளிர்க் கற்பகம் ஐந்தும், நிதிகளிரண்டும், தேனும் முத லியவற்றைத் தன்பாற் கொண்டமையின் வையகத்தைவிட நனி சிறந்ததாம். வானகம் இவ்வகையால் சிறந்ததாயினும், யாவ ரும் எளிதே எய்துதற்கு அரியதாயிருத்தலானும், உணவும் உறக்கமும் நீத்து, உயிர்ப்பு மின்றி, உஞற்றுந் தவத்திற் கேற் பப் பின்னல் பயன் தருதலானும், விண்ணெய்திய நல்லுயிர் தான் உஞற்றுந் தவத்திற்கும், அறத்திற்கு மேற்ப வமைந்த கால வெல்லைவரை, அவ்வுயிர்க்கு இருக்கைதந்து, பின், செய்த வினைக்குத் தக நீள் நிரயமாகிய பிலத்தினுள்ளே செலுத்தா நிற்கும் நீர்மையுடைய தாதலானும், அஃது இன்ன பல குறைபாடுகளையுமுடைத்து.

> 'உறக்கும் துணையதோர் ஆலம்வித் தீண்டி
> இறப்ப நிழற்பயந் தாஅங்—கறப்பயனும்
> தான்சிறி தாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
> வான்சிறிதாப் போர்த்து விடும்'

என்ற நாலடிச் செய்யுளும் ஈண்டு நினைவிற்குக் கொணரற் பாற்று. இவ்வாறு வானகம் சில குறைபாடுடைமையின் அது தீர்ந்து சிறத்தற்கு, வானகத்தைமட்டும் வழங்காது, அதனொடு வையகத்தின் விழுச் சிறப்பினையு முணர்த்த, வள்ளுவனார், 'செய்யாமற் செய்த வுதவி' என்ற குறள் வெண்பாவில் 'வைய கமும் வானகமும்' எனக் கூட்டி நிரல்பட வைத்த அருமை பாராட்டற்பாலது.

வையகமோ பிறரால் அறியப்படாத உருவத்தின் பெருமையும், திண்மையும், தன்னை அகழ்வாரையும் தன் பெருமைக்குக் குறைவின்றித் தாங்கிப் பொறுக்கும் பொறுமையும், புறநோக்கிப் புன்சொலுரைப்பான் பொறையினையும், இசையிலா யாக்கையின் பொறையினையும், மற்றும், நன்றிசெய்தல், பிழை பொறுத்தல் முதலாய உலக நடைக்கண், கண்ணோட்டமில்லாரது பொறையினையும், அறம்நோக்கிப் பொறுத்தலும், பருவத்திலே உழவர் செய்யும் முயற்சி அளவிற்குத் தக அவர்க்குப் பயனைத் தருதலும், ஓரறிவு முதல் ஆறறிவுடைய பல்லுயிர்க்கும், பல்வகை வளங்கள் கனிந்து விளைத்தலினால், ஆக்கந்தந்து, தன்னிலை துளங்கி வருந்தாது வாழ்விக்கும் தன்மையும் விளங்கும் நிறைவுடையது. ஆனால் பருவம்தப்பி விதைத்து அதற்கு ஆகவேண்டிய முயற்சியும் செய்யின், வையகம் பயனைத் தருமென்பது திண்ணமில்லையென்பது ஈண்டுணரற்பாற்று. வித்துங் காலத்தால் விளைவுறும் பயன் வேறு படுதல் வையத்தியல்பென்றுரைப்பாருமுளர். எனவே, திருவள்ளுவர் வையகமும் வானகமும் தன்கண் பல சிறப்புக்களை யுடையவாயினும், சிலகுறைபாடுகளுடன் தொடர்புடையதாயிருப்பதாலும், அவை செய்யாமற் செய்த உதவிக்கு ஒப்பாகா எனத்தமக்குள் தேறி, தமக்கு முன்னொருதவியுஞ் செய்யாதிருக்க, ஒருவன் பிறனுக்குச் செய்த உதவிக்கு மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் ஈடாகக்கொடுத்தாலும் ஒத்தலரிது என்று கூறியது ஈண்டறியற்பாலது.

இனி, காலத்தாற் செய்த உதவி எங்ஙனம் ஞாலத்தினும் மாணப் பெரிது என்பதனைக் காண்குவம். காலத்தின்கட் செய்த நன்றிக்கும் ஞாலத்துக்குமுள்ள பொதுத்தன்மையினையும், ஞாலத்திற்கின்றிக் காலத்தினாற் செய்த நன்றிக்கே யுரிய சிறப்பினையும் யாதென ஆய்ந்துநோக்கின், காலத்தினாற் செய்த நன்றி எஞ்ஞான்றும் ஞாலத்தினும் மாணப்பெரிதென்பது ஐயமறத் தெளியப்படும். உண்டி முதலாயின அளித்தலானும், பல்லுயிரையும் தாங்கும் திண்மையுடைமையானும் ஓம்புதல், காலத்தினாற் செய்த நன்றிக்கும் ஞாலத்தின் நன்றிக்கும் பொதுவாகும். ஆனால், கூர்ந்து சிந்திக்கப் புகின், ஞாலமோ யாரொருவர்க்கும் இறுதி வந்த எல்லை உதவுவதில்லையென்பது அறியக் கிடக்கின்றது. அது பயன் விளையுங்காலை கால எல்லை நோக்கியே யுதவும். தெய்வத் தன்மை வாய்ந்த தமிழ் மூதாட்டியார் ஔவையாரும்,

'அடுத்து முயன்றாலும் ஆகுநா ளன்றி
எடுத்த கருமங்கள் ஏலா—தொடுத்த
உருவத்தால் நீண்ட வுயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா.'

என அருளிச் செய்தது ஈண்டு நோக்குதற்குரியதாம். இறுதி வந்த எல்லைக்கண் செய்த உதவி சிறிதெனினும், அது காலத்தினாற் செய்த சிதையாத நன்றியாகின்றது. இச்சிறப்பு ஞாலத்துக்கின்மையின், காலத்தாற் செய்த நன்றி ஞாலத்தினும் மாணப் பெரிதாயிற்றெனக் கண்டு கொள்க.

இனி, பயன்றூக்காது செய்த நன்றி, நன்மையினைப் பெருக்கி, சிறப்ப நிற்றலான், அஃது எவ்வாற்றான் கடலிற் பெரிதென்பதை ஈண்டு நோக்குவாம். உலகநடை, மழை வளம் நிலைநிற்றலானே தப்பாது வருதலான், அவ் வுலகம் சீரிய நிலையில் நடைபெறுதற் பொருட்டு, மண்ணிலும், விண்ணிலும் நீர் தங்க வேண்டுமென்பது உணரற்பாற்று. கடலில் நீர் இல்வழி வையகங் கரிந்துபோம். வானகத்திலும் கொண்மூ வடிவாய் நீர் இல்வழி உலக ஞாயிறு கொதித்தெழுந்து பொறுத்தற்கரிய கடுமை கூரும் வெம்மையை இவ்வையகத்தில் விளைக்கும். துளியின்மையால் ஞாலம் துன்பமுறும் ஆதலான், நீரின்றமையாதுலகம், எனவே நிலத்தில், நீரில்லாவிடின், வள்ளுவருரைத்த வண்ணம் விசும்பிற் றுளி வீழினல்லது பசும்புற் றலையும் காண்ப தரிது. நீருள் வாழ்வனவும் படுவனவுங் கெடு மாதலான், நிலமேயன்றி நெடுங் கடலுந் தன்னீர்மை குன்றும். வானம் வறக்குமேல் வானோர்க்கும் சிறப்பொடு பூசனை செல்லாது. தானந் தவ மிரண்டுந் தங்கா. எனவே, வையகத்தார்க்கும் வானகத்தார்க்கும் இன்றியமையாது வேண்டப்படும் மழைக்குக் கடலே முதற் கருவியாக அமைதலான், அக்கடலின் பெருமையும் சிறப்பும் ஈண்டறியப்படும்.

'கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட், டென்னாற் றுங்கொல்லோ வுலகு' எனக் கைம்மாறு நோக்காது பிறர்க்குதவும் செயலுக்கு எடுத்துக் காட்டாக, உயிர் வாழ்தற்கு இன்றி யமையாது வேண்டப்படும் நீரைத்தரும் மாரியிருக்க, வள்ளுவனார், ஈண்டு, நெடுங்கடலைக் கூறியதென்னேவென ஆயின், கடல் பயனெதுவுங் கருதாது மேகங்களுக்குத் தனதாவியைத் தந்து உலகிற்கு வான் வழங்கச் செய்தலால் செய்ந்நன்றி யறிதலின் சிறப்பை யுணர்த்த வள்ளுவருக்கு,

ஒய்வு ஒரு சிறிதுங் காணுப் புரட்சியுடைய கடலே ஏற்புடை எடுத்துக் காட்டாயிற்று. பயன் நோக்காது; வள்ளன்மையில் தனக்கு நிகர் தானே நிற்கும் மேகத்திற்குத் தன்னைக் கொடுக்க, மேகம் அதனை அவ்வாறே கைம்மாறு கருதாதும், பெருதும் உலகிற்குக் கொடுத்தலென்னும் வகையில் சிறப்பெய்தியது கடலாதலான் 'கடலிற் பெரிது' என ஆசிரியர் திருவள்ளுவர் கூறியிருக்கும் பான்மை பெரிதும் பாராட்டற்பாலது, மற்றும் தனக்குப் பிறரியற்றும் உதவியின் நயனைக் குறிக்குங்கால், அவ்வுதவி கைம்மாறு கருதா உதவியாயின், அதன் சீரும், அத்துணைச் சீருலாவிய சிறப்புடைய உதவியைப் பெற்ற தான் அதனை இறைபோதும் மறவா திருக்க வேண்டுமென்ற கடப்பாட் டுணர்ச்சியும் தோன்ற, செந்நாப் போதார் 'பயன் றூக்கார் செய்தவுதவி நயன் றூக்கி, னன்மை கடலிற் பெரிது' என்ற குறட்பாவில் நன்குணர்த்திய மென்மை, பொருட் சிறப்புநோக்கி ஏற்றது கொள்ள லென்னும் உத்தியால் புலனும். கார்கோள், தன்னை மேகத்திற்குக் கொடுக்குங்கால் பயன்கருதுவதின்றுயினும், அதன்பால் அவ்வுதவியைப் பெற்ற மேகம் அதனை மறவாது அது தனதியல்பிற் குறையுமென அதற்குதவுதல் 'நெடுங்கடலுந் தனநீர்மை குன்றுந் தடிந்தெழிலி, தானல்கா தாகிவிடின்' எனும் வாயுறை வாழ்த்தால் பெறப்படுதல் ஈண்டு உணரற்பாலது.

மேகங்கள் படிந்து முகத்தலாற் குறைதலின்றியும், ஆறுகள் நிறைந்து பாய்தலால் மிகுதலின்றியும் ஒரு தன்மைத்தாய்க் கண்வரம்பறியாது பரந்து நிற்கும் பான்மையது கடல்; முடிவு காணுது முழங்குங்கடல், விளங்கு கதிர் முத்தமும் மணியுந் தந்துதவும். விண்ணுறவோங்கி நிற்கும் முகில் தவழும் மலைமேல் மழைபெய்தலால், மலையிலுங் காட்டிலும் வையகத்திலுமுள்ள அழுக்குகள் யாவும் ஆறுகளின் மூலம் கடலிற் போய்ச் சார்ந்தும், கடல் அவ்வழுக்குகளை ஏற்றும் கறைப்படுவதில்லை. எனவே, கோல்நிலை அறியா ஆழமுடைய கடல், மழை முகமாகவும் ஆறு முகமாகவும் ஓரறிவு முதல் ஆறறிவு ஈருகவுள்ள உயிர்களை மகிழ்வித்தும், அவைகளுக்கு உணவையாக்கித் தருவதுடன், உணவுமாகிநின்றும் இன்னும் பலவாருகப் பயன்பட்டு ஆக்கமொருங்கே தருதலான், பயன்றூக்காது செய்த உதவிக்கு அக்கடல் ஒப்பாகுமென ஆசிரியர் திருவள்ளுவர் குறித்தனர். 'தெண்ணீர்ப் பரப்பின் இமிழ் திரைப்பெருங்கடல், உண்ணுராகுபநீர்வேட்

டோரே' எனக் கூறியாங்கே, கடல் உவர் நீரைத் தன்கணுடைமையால் அந்நீர் நேரடியாகப் பயன் தருதலில்லாதது. கதிரவனின் வெப்ப ஆற்றலால், அந்நீர், ஆவியாகமாறி முகிலாய் விண்ணிலெழுந்து மலைகளிற் றவழ்ந்து மாரியாகப் பெய்துதவுங் காலையிலும், அது, கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய், மற்றாங்கே எடுப்பதூஉமாகிக் கேடும் நலனும் தருமாதலானும், மற்றும் அம்மழை மிகினுங் குறையினும் கெடுநோய் பரவச் செய்து வாழுமுயிர்க்குத் தீங்குகள் விளைவித்தலானும், நவை ஒரு சிறிதுமில்லாத பயன்றூக்காத நல்லுதவி அக்கடலினும் மாண்புடைத்தென முதற்பாவலர் துணிந்து கூறுவாராயினரென்க.

இதுகாறும் ஒருவருக் கொருவ ராற்றும் உதவிகளுட் டலைசிறந்த அரிதும் பெரிதுமாய மூவகை யுதவிகள் யாவையென்பதும், அவை எவ்வாற்றால் முறையே வையகமும் வானகமு மாற்றினும் ஒத்தல் அரியனவென்பதூம், ஞாலத்தினும் கடலினும் பெரிதாயினவென்பதூம், அவைகளின் உட்கோளின்னவென்பதும் ஆய்ந்து அறியப்பட்டன. இனி 'நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம், மலையினும் மாணப் பெரிது' எனுங் குறட்பாவின் கருத்தைப் பொருளொடு பொருத்தி உரைப்பாம்.

அறியப்படுவனவாகிய சுவை, ஒளி, ஊறு, ஓசை நாற்றம் ஆகியவைகளையுமறிந்து, அடக்கப்படுவனவாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவைகளையுமறிந்து பின் நெறியினானே ஐந்தடக்கி ஒரு மனப்பட்டுத் தனது நிலையிற் கெடாதே உள்ளடங்கி யிருப்பவரது காட்சியும் உயர்ச்சியும் மலையினும் மாணப் பெரிதாம். 'அளக்கலாகா வளவும் பொருளுந், துளக்கலாகா நிலையுந் தோற்றமும்' கொண்டு கண்டோருடைய மயக்கத்தைப் போக்கும் பெருமையுடையது மலை. அஃது உயர்வும் வளனும் துளங்காமாட்சியுமுடைத்து. மற்றும் வானம் வறப்பினும், தன்னைச் சார்ந்த உயிர்களுக்கு நீர் வளத்தைச் சுனை மூலம் கொடுக்கும் வண்மையுமுடையது மலையாதலான், அதனைக் கண்ணுறுவோர் எவரும் தம்மை அறியாமலே மனவமைதியுற்று ஓவியமாவார். அன்றியும், மலையைக் காண்பார், பொறுமையான அகவுணர்ச்சியையும் கொண்டு உலகினர் மாட்டுக் கருணையையும் பொழிவார். தானே தனித்து நின்று அசைவில்லா உறுதிப்பாட்டுடன் விளங்கும் நிலைமையும், வீரம் கருணை முதலியன தன்னகத்தே

கொண்டு தனித் திலங்கும் ஒப்பற்ற உயர்வுமுடையது மலே. இவ் வருமைப்பா டுடைய மலே, நில இயற்கையையும் மக்கட் டொகுதியையும் பிரித்துப் போக்கு வரவு வசதிகளையும் தடுத்துக் குறுக்கே நிற்பதினுனும், (மலேயென்பது விலங்கு, விலங்கு குறுக்கே வளர்வது) எதிரொலி செய்யும் தன்மை வாய்ந்து, அச்சமே தரும் கொடியவிலங்குகளைத் தன்னகத்தே கொண்டிருப்பதினுனும் மற்றும் இன்னேரன்ன சில சிறுமை களும் அதன்மாட்டே காணப்படுதலானும் அடக்கத்தினுல் தன் பெருமையைச் சுருக்கிக் கொண்டு முற்றும் பெருமையாகவே யுள்ள நிலேயிற் றிரியா தடங்கிக் குணமென்னுங் குன்றேறிநின் ருர்க்கு, அம்மலே ஒப்பாகாதென்று திருவள்ளுவர் தன்னுள் தேறி, நிலேயிற் றிரியா தடங்கியான் தோற்றம் மலேயினும் மாணப் பெரிது என்று வரையறுத்துக் கூறலுற்ருரென்க. அன்றியும், மலேக்கும் பெரியோர்க்கும், பொதுத் தன்மை யாகிய நிலேயிற் றிரியாமையும், மலேக்கின்றிப் பெரியோர்க்கே அமைந்த சிறப்புத் தன்மையாகிய அடக்கமும் ஆசிரியராற் கூறப்பட்டமையுங் கண்டு தெளிக.

எனவே இதுகாறுங் கூறியவாற்ருல், மக்கட் பிறப்பின் மாண் பயனே அடைய விரும்புவார் இடும்பைகூர் இழிவயிற் றினைப் பேணற்கே நாளும் காலத்தைக் கழிக்காது, அரிய பெருமையெனு மொரு பொதுத் தன்மைபற்றி, உலகிடைத் தோன்றும் ஒவ்வொரு இயற்கைப்பொருளும் நவையறுகாட்சி நல்கிப் பின் புன்னெறி யதனிற்செல்லும்போக்கினையும்விடுத்து நல்லொழுக்கத்திற்கு அரணுக நின்று மாந்தாது உள்ளத்தைப் பண்படுத்தி உயர்ந்த எண்ணங்களைத் தோற்றுவித்து, உயர் நெறியிற் செலுத்தும் திறத்தை யுடையதாகலின், அவ்வியற் கைப் பொருள்களையும், அப்பொருள்களோடு ஒன்றித்தோன் றும் பரம்பொருளையும் ஆராய்ச்சி வகையால் நுணுகி ஆழ்ந்து கண்டார், ஆழ்ந்தகன்ற நுண்ணியராய இறைவனேடியையும் இன்பு நிலேயும் அடைவா ரென்பது திண்ணம் மற்றும் பெரு நாவலர், இறைவன் எங்கணும் நிறைந்த நிலேபோன்று அகன்று உயர்ந்து ஆழ்ந்து நிலேத்திருத்தற்கு முறையே மண்ணேயும், விண்ணேயும் கடலேயும் மலேயையும் உவமை அணியான் கவின்மிகுமாறு கண்டு, எடுத்த மூவகை உதவி யும் அடக்கமும் பற்றிய தன்மைகளே இறைவனுக்குரியனவாக வுணர்ந்து மெய்ம்மை கனியச் செவ்விய முறைமையில் அற வாழிப் பெருநூலில் இறைமணங் கமழப் புலப்படுத்திய திறம் பெரிதும் போற்றத் தக்க தொன்ரும்.